# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of District Munsif cum Judicial Magistrate No. I, Usilampatti**

**Case No. 4/2023**

**Deposition of Witness for Prosecution : PW3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ராதாமணி** | Caste | : |
| Father/Husband Name | : **பாலமுருகன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(all accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 11.02.2026**

**முதல் விசாரணை** :

நான் ஹைதராபாத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். அ.சா.2 எனது கணவர் ஆவார். கடந்த 2020 மாசி மாதம் உசிலம்பட்டியில் வைத்து எனது மகளை 1வது எதிரிக்கு திருமணம் செய்து வைத்தோம். எனது மகளுக்கு 60 பவுன் நங்க நகையும், 1வது எதிரி 6 பவுன் நகைகளும் கொடுத்தோம். பின்னர் தொழில் நடந்த வேண்டும் என்று பணம் வேண்டும் என்றும் எனது மகளிடம் எதிரிகள் கேட்டார்கள். நாங்கள் ரூபாய் 15 லட்சம் கொடுத்தோம். மேலும் பணம் கேட்டு எனது மகளை அடித்து துன்புறுத்தினார்கள். இதுசம்பந்தமாக எனது மகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நாங்கள் தெலுங்கானா மாநிலத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். ரூபாய் 15 லட்சம் அ.சா.1 எங்களிடம் கேட்டதை வைத்து தான் எங்களுக்கு தெரியும். மேற்படி வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக எந்த எதிரிகளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கும்போது வந்தேன். என்னிடம் புகாரில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார். மேற்படி பணம் கொடுத்ததிருக்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கினோமா என்றால் இல்லை. புகைப்படம் எதுவும் எடுத்தமோ என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 எனது மகள் என்பதால் அ.சா.1 கொடுத்த புகாருக்கு ஆதாரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d. Radha mani
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.